# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 122/மா/2025**

**நாள்: 04.02.2026**

A.J. ஆரோக்கிய ஜெயசாமி,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–75, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெரு, பிளாட் எண் 38 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் 19.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2025 அன்று பெறப்பட்டு 122/மா/2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–75, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெரு, பிளாட் எண் 38 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி தனது 19.03.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "Manholes at LIC Colony Extension, Annai Teresa Street, Pammal Zone of the Tambaram City Municipal Corporation have not been properly leveled up the surface level and in view of this resident could not ply their vehicle smoothly." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 12.12.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 1522/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> "தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–1க்குட்பட்ட பகுதியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் புகாரில் LIC காலனி விரிவு, அன்னை தெரசா தெரு, பாதாள சாக்கடை (Manhole) பள்ளமாக உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமம்படுவதாக தெரிவித்துள்ளார்.
>
> மேற்படி புகார் தெரிவிக்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை பள்ளம் சமன் செய்து போக்குவரத்து இடையூறு ஏற்படாத வண்ணம் சரிசெய்யப்பட்ட புகைப்படம்

இணைக்கப்பட்டுள்ளது என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தாம்பரம் மாநகராட்சி, பம்மல் மண்டலம், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெருவில் அமைக்கப்பட்ட கால்வாய் குழியால் அத்தெரு குண்டும் குழியுமாகவும் மேற்பரப்பு முறையாக சமன் செய்யாமல் இருந்தது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளித்த புகார் தொடர்பாக தற்போது தாம்பரம் மாநகராட்சியால் அத்தெருவின் மேற்பரப்பு சமன் செய்யப்பட்டுள்ளது என மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 30.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட பகுதியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் புகாரில் LIC காலனி விரிவு, அன்னை தெரசா தெரு, பாதாள சாக்கடை (Manhole) பள்ளமாக உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி புகாரில் தெரிவித்துள்ள பகுதியில் பாதாள சாக்கடை பள்ளம் சமன் செய்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் சரி செய்யப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தாம்பரம் மாநகராட்சி, பம்மல் மண்டலம், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெருவில் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை (Manhole) சரியாக அமைக்கப்படாததால் வாகன ஒட்டிகள் மிகவும் சிரமப்படுவதாகப் புகார் தெரிவித்திருப்பதும், குண்டும் குழியுமாகவும் மேற்பரப்பு முறையாக சமன் செய்யாமல் இருந்த தெரு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்ததின் அடிப்படையில், தற்போது தாம்பரம் மாநகராட்சியால் அத்தெருவின் மேற்பரப்பு சமன் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்திருப்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட பகுதியில் உள்ள LIC காலனி விரிவு, அன்னை தெரசா தெரு, பாதாள சாக்கடை (Manhole) பள்ளமாக உள்ளதால் வாகன ஒட்டிகள் மிகவும் சிரமப்படுவதாக மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், மேற்கண்ட தெருவில் பாதாள சாக்கடை பள்ளம் சமன் செய்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் சரி செய்யப்பட்டுள்ளது என்பதை எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட பகுதியில் LIC காலனி விரிவு, அன்னை தெரசா தெருவில் பாதாள சாக்கடை (Manhole) அமைக்கப்பட்ட போது ஏற்பட்ட பள்ளத்தினை, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனுதாரர் அளித்த மனுவினை தொடர்ந்து, மேற்கண்ட தெருவில் பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட போது ஏற்பட்ட பள்ளம் சமன் செய்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் சரி செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி,
பிளாட் எண் 38,
அன்னை தெரசா தெரு,
எல்.ஐ.சி காலனி விரிவாக்கம்,
பம்மல், சென்னை–600 075.

(2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்
5/2/26